# முடிவுரை

"அற இலக்கியங்களில் நிலையாமைக் கருத்துக்கள்" குறித்து இதுவரை ஆராய்ந்ததன் பயனாய்க் கண்டறிந்த முடிவுகள் இங்கு தொகுத்துத்தரப்பட்டுள்ளன. உடல் மற்றும் இளமை, செல்வம், அழகு ஆகியன நிலையற்றத் தன்மையுடையன எனும் கருத்துக்கள் ஆராயப்பட்டுள்ளன.

தொல்காப்பியர் நிலையாமை பற்றி, புறத்திணையில் ஒன்றான காஞ்சித்திணையில் எடுத்துக்காட்டி உள்ளார். வாழ்க்கையில் செல்வம், இளமை, யாக்கை என்பன நிலையில்லாத தன்மையுடையன என்பன பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

செல்வத்தைப் பெற்றவுடன் அப்பொழுதே நிலையான அறங்களைச் செய்யவேண்டும் என்றும், நிலையற்றதாகிய செல்வத்தின் மீது ஆசை வைக்கக்கூடாது என்பது பற்றியும் அறியமுடிகிறது. செல்வம் என்பது வண்டியின் சக்கரம் போல சுழன்று மாறி மாறி வருவதாகும். அவை ஒரே இடத்தில் நிலைத்து நிற்காது என்பதும் விளக்கப்பட்டுள்ளது. பொருள் இருக்கின்ற போதே பல நல்ல அறங்களைச் செய்து வாழவேண்டும் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

செல்வம் உள்ள இளமைப் பருவத்திலேயே பல அறங்களைச் செய்ய வேண்டும். அறங்களைச் செய்தவர்கள் புண்ணிய உலகம் செல்வார்கள் என்பது தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. பெருமையை அளிக்கக்கூடிய பொருளை மிகுதியாகச் சேர்த்து வைத்துள்ள செல்வர்கள் தமது முதுமைக்காலத்தில் பயன்பட வேண்டும் என்று எண்ணி, செல்வத்தை இறுக்கமாகப் பிடித்து வைக்கக்கூடாது என்று விளக்கப்பட்டுள்ளன. பெரிய செல்வம் என்பது கூத்தாடும் இடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்றதாகும். செல்வம் நீங்கிப்

போவது கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றதாகும் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஊர்நடுவில் நச்சுமரம் பழுத்தால் அது யாருக்கும் பயன்படாமல் போய்விடும். அதைப் போன்று பிறருக்குக் கொடுக்காதவனுடைய செல்வமானது அழிந்து போய்விடும் என்பது இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

இளமைப் பருவம் என்பது கடலில் மூழ்கும் மரக்கலம் போன்றது. ஆதலால் இளமைப் பருவத்தைக் காட்டிலும் மனிதனது உடல் நோயில்லாது இருத்தலே சிறப்பு என்பது பற்றி நூலாசிரியர்கள் எடுத்துரைத்துள்ளமை காணமுடிகிறது.இளமை நீங்கி முதுமை வந்ததும் மனிதனது உடல் தோற்றம் மாறிவிடும் நிலை ஏற்படும் என்பதை அறியமுடிகிறது.

காற்றடிப்பதனால் மரங்களில் உள்ள கனிகள் மட்டும் விழுவதில்லை. காய்களும் விழுவதுண்டு. அதுபோலவே மரணம் என்பது முதுமையில் மட்டும் வருவதில்லை. இளமையிலும் மரணம் வருவது உண்டு என்பது ஆராயப்பட்டுள்ளது.

மனிதனது மூன்று பருவங்களான பாலன், இளையவன், முதியவன் என்ற பருவங்கள் அழிந்துவிடக் கூடியதாகும் என்பதை அறியமுடிகின்றது. ஒவ்வொரு நாளும் இளமைப் பருவமும், இளமைப் பருவத்தால் அடையும் இன்பமும் விரைவாகக் கழிந்து கொண்டே இருக்கின்றன. எய்த அம்பின் நிழலைப் போல் இளமைப் பருவம் வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்ற நிலை விளக்கப்பட்டுள்ளது.

கதிரவன் காலையில் உதிப்பதும் பின் மாலையில் மறைவதும்போல இளமை என்பதும் முதுமை வந்ததும் மறைந்து விடுகிறது. நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை உடையது இவ்வுலகம். இளமைப் பருவம் நிலைபெறாது. முதுமைப் பருவத்தில் நோய்கள் வந்து சேரும். அதனால் இளமைப்

பருவத்திலேயே நாட்களைத் தள்ளிப்போடாமல் நல்ல அறங்களைச் செய்யவேண்டும்.

உடல் அழிந்துவிடக் கூடியது. பிறப்பும், இறப்பும் மாறி மாறி வருவதாகும். கிழப்பருவம் அடைந்து, நோய்வாய்ப்பட்டு இறுதியில் இறப்பது இவ்வுடலின் இயல்பாகும். மேலும் இவ்வுடலானது புல்லின் நுனியில் உள்ள நீர்த்துளிபோன்று நிலையாமை உடையது. அதனால் இறப்பதற்கு முன்பே அறச்செயல்களைச் செய்யவேண்டும் என்று அறநூல்கள் எடுத்துரைக்கின்றன.

உடலின்மீது ஆசை வைத்திருந்தால் அதனால் பல துன்பங்கள் வந்துசேரும். உடம்பானது துன்பத்தை இட்டுவைக்கும் பையாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இவ்வுடல்மீது கொண்டுள்ள பற்றை நீக்கி தாமரை இலைத்தண்ணீர் போல் வாழ வேண்டும்.

பிறப்பதும், வயது முதிர்ந்து கிழப்பருவம் அடைவதும், நோய்வாய்ப்பட்டு வருந்துவதும் இறுதியில் இறப்பதும் இவ்வுடலின் இயல்பு. இதுவே மனிதனின் உடம்பாகும் என்பதை அறியமுடிகின்றது.

செல்வம், இளமை, யாக்கை இவைகள் நிலையில்லாதவைகள் அதன் மேல் வைக்கின்ற பற்றை நீக்கி அறங்களை மட்டும் செய்ய வேண்டும். மனிதன் இறக்கும் போது எதையும் கொண்டு செல்வது கிடையாது. அதனால் உயிர்வாழும் போதே பல அறங்களைச் செய்ய வேண்டும். செல்வம், இளமை, யாக்கை இவைகள் இருக்கின்ற போதே அறம் செய்யவேண்டும். மனிதனது வாழ்வில் எதுவும் நிலையில்லாதது. அறங்கள் மட்டுமே என்றும் நிலையானது என ஆராயப்பட்டுள்ளது. அற இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள கல்விச் சிந்தனைகள் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது. திருக்குறளில் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை முதலான அதிகாரங்களின் வழி கல்வியின் முக்கியத்துவத்தை அறியமுடிகின்றது.

‘தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு

கற்றனைத் தூறும் அறிவு’

மணற்கேணியைத் தோண்டிய அளவிற்கு நீர் சுரப்பது போல ஒருவன் கல்வியை கற்ற அளவிற்கு அறிவு வளரும். பல நூல்களைக் கற்பதால் புதிய புதிய கருத்துக்களை அறிந்து கொள்ளமுடியும். உயர்ந்த குடியில் பிறப்பதைவிட, கையில் இருக்கிற பொருளைவிடக் கல்வி கற்பதனால் உயர்வு அடைய முடியும். கல்வியே உண்மைப் பொருளாகும் என்பதனை உணரமுடிகின்றது.

கல்வி கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர் தெய்வத்திற்குச் சமமாவார். அவருக்குக் கொடுக்க வேண்டிய குருகாணிக்கையைச் சரியாகக் கொடுக்க வேண்டும். ஆசிரியருக்குப் பல உதவிகள் செய்ய வேண்டும் என எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

செல்வங்களில் எல்லாம் தலைசிறந்த செல்வம் என்பது கல்விச் செல்வமே ஆகும். அப்படிப்பட்ட கல்விச் செல்வத்தை ஒருநாளும் கற்காமல் இருக்கக் கூடாது. பிச்சை எடுத்தாவது கல்வியைக் கற்க வேண்டும். கற்பதினால் உயர்வடைய முடியும் என்று விளக்கப்பட்டுள்ளன.

‘அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது’ மக்கள் பிறப்பைப் போன்று சிறந்த பிறப்பு வேறு எதுவுமில்லை.அப்படிப்பட்ட மக்கள் பிறப்பில் கல்வி கற்று, கற்றபடி நடக்க வேண்டும். கற்றபடி ஒழுகாதவன் தாமரைப்பூ கல்பட்டு சிதைவது போல் துன்பத்தால் சிதைந்து அல்லல்படுவான் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

சிலநாளே வாழ்ந்து மடியும் இந்த நிலையற்ற உடம்பினால் எந்தப் பயனும் இல்லை. நிலையாக நிற்கும் கல்வியை கற்று வாழ்வதே உயர்ந்த வாழ்வாகும். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. கற்றவர்களுக்கு

எல்லா நாடும், எல்லா ஊர்களும் சொந்தமாகும். அவர்களுக்கு என்று தனியாக ஊர்கள் இல்லை. அவர்கள் சென்ற இடமெல்லாம் சிறப்படைவார்கள். நாட்டை ஆளுகின்ற அரசர்களும் கற்றறிந்த புலவர்களுக்கு ஒப்பாகமாட்டார்கள் என்பது பற்றி அறியமுடிகின்றது.

'இளமையில் கல்' கல்வி என்பது இளமைப் பருவத்தில் கற்க வேண்டியதாகும். இளமையில் கல்வியைக் கற்றுக்கொண்டால் அது மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து கொள்ளும். இளமையில் கற்கின்ற கல்வியே என்றும் மறவாமல் பயன்படுவதாகும். இளமைப் பருவத்தை வீணாகக் கழிக்காமல் கல்வி கற்றால் வாழ்க்கையில் சிறப்படையலாம் என விளக்கப்பட்டுள்ளது.

கல்வி நல்வாழ்க்கையாகிய இம்மைப்பயனை விளைவிக்கும். பிறருக்குக் கற்றுக்கொடுப்பதால் குறைவுபடுதல் இல்லை. கல்வி கற்றவர்களை அறிவாலும், புகழாலும் உயரச்செய்யும். கல்வி அறியாமை மயக்கத்தைத் தீர்க்கும் மருந்து என எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தன்னை நாடி வருகின்றவர்களுக்கு நூல்களின் கருத்துக்களைத் தெளிவாக விளக்கிக் கூறுவது கல்வி கற்றவர்களின் கடமைகளாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

பாம்பினுடைய கால்களைத் தமக்கு இனமாகிய பாம்புகளே அறியும் தன்மையுடையன. அதுபோல கற்றோர் பெருமையைக் கற்றோரால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும் என்று உணர்த்தப்பட்டுள்ளன.

கல்வி கற்காதவன் கற்றவனைப்போல் நடித்தாலும் அவன் கல்வி கற்காதவனாகவே கருதப்படுவான். கற்றவர்களுக்கு மயிலும், கற்காதவர்களுக்கு வான்கோழியும் ஒப்புமைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன.

மகனை கல்வி கேள்விகளில் சிறந்த சான்றோனாக்குதல் தந்தையின் கடமைகளில் ஒன்றாகும். தந்தை தன் மகனுக்குச் செய்யத்தக்க நல்ல உதவி

கற்றவர் கூட்டத்தில் தன் மகன் கல்வியில் மேம்படச் செய்தலாகும் என்பன விளக்கப்பட்டுள்ளன.

கல்வி கற்க முடியாவிட்டாலும் கற்றறிந்தவரிடம் கேட்டறிய வேண்டும். அது ஒருவனுக்கு வாழ்க்கையில் தளர்ச்சி வந்தபோது ஊன்றுகோல்போல் துணையாகும் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

'கற்றதுகைம் மண்அளவு' எப்பொழுதும் படித்துக் கொண்டே இருக்க வேண்டும். எவ்வளவு கற்றிருப்பினும் அதனை ஒரு கைப்பிடி மண்ணின் அளவாகவே கருத வேண்டும். கல்வியைக் கற்க, கற்கத்தான் அறிவு மேலும் மேலும் வளரும். கல்விக்கு வயது வேற்றுமை இல்லை. கற்றவர் எவ்வளவு சிறியவராய் இருப்பினும் எவ்வளவு பெரிய செயல்களையும் செய்து முடிக்கும் ஆற்றல் உடையவர்கள் ஆவார்கள். பெரிய தேரைச் செலுத்துவது சிறிய அச்சாணியாகும். மடலால் பெரிய தாழம்பூவைக் காட்டிலும், மடலால் சிறிய மகிழம்பூ மிகுந்த மணத்தைக் கொடுக்கும். உருவத்தால் பெரிய கடல் குளிக்க உதவுவது இல்லை. சிறிய ஊற்றுநீரே குடிக்க உதவுகின்றது. அதுபோல உடலாலும், வயதாலும் சிறியவர் என்று இகழ்ந்துவிடக் கூடாது. அவர்தம் கல்விப்பெருமையினையே நோக்க வேண்டும் என்பதை அறியமுடிகின்றது.

ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் ஒருவனுக்கு ஏழுபிறப்பிலும் உதவும் தன்மை உடையதாகும். கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டாகும். அறம், பொருள், இன்பம், வீடுபேறு அடைவதற்கு கல்வியே சிறந்த ஊன்றுகோலாகும் என்பவை பற்றி ஆராயப்பட்டுள்ளன.

பெருமையும், வலிமையும் ஆணுக்குரிய பண்புகளாகவும், அச்சம், மடம், நாணம் ஆகியன பெண்ணுக்கு இருக்க வேண்டிய குணங்களாகும் என்ற தொல்காப்பியரின் கருத்து விளக்கப்பட்டுள்ளன. ஆணும், பெண்ணும் மனித சமுதாயத்தின் இருசம பகுதிகள். சமுதாயத்தின் அடிப்படை அமைப்பான

குடும்பத்தை அமைக்கவும், உருவாக்கவும் இருபெரும் சக்திகளாக ஆணும், பெண்ணும் உள்ளனர் என்பது புலப்படுகிறது.

கற்பு நெறியில் தன்னையும் காத்துக்கொண்டு தன் கணவனையும் காப்பாற்றி, தகுதியமைந்த புகழையும் காத்து உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண் என்பது விளக்கப்பட்டுள்ளது. பெற்ற பொருளைக்கொண்டு அதில் சிறிது அறஞ்செய்து, தாமும் உண்டு, நல்வாழ்க்கை மேற்கொண்டு கற்பு நெறியில் வழுவாமல் நிற்பவர்களே பெண்கள் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அன்பு, தியாகம், தொண்டு, பொறுமை, அறிவு, அழகு ஆகியவை எல்லாம் அமையப் பெற்றவளே பெண் ஆவாள். தம் கணவரது வருவாயின் அளவை அறிதல், அதற்குத்தக்கவாறு செலவு செய்தல், சுற்றத்தினர் விரும்பும்படி விருந்தோம்பல், செல்வத்தைத் தருகின்ற தெய்வத்தை வழிபாடு செய்தல் ஆகியவை பெண்களுக்குச் சிறப்பினைத் தரும் என்பது ஆராயப்பட்டுள்ளன.

வறுமையிலும் கடமையைச் செய்பவளாக வாழ்பவளே நல்ல மனைவி என்றும், கற்பு என்னும் உறுதிநிலை கொண்டப் பெண் பெருமை அடைவாள் என்றும் விளக்கப்பட்டுள்ளன.கற்பை ஆடையாகவும், அன்பை மலராகவும், நாணத்தைச் சந்தனமாகவும், நற்குண நற்செயல்களை ஆபரணங்களாகவும் அணிந்திருக்க வேண்டும். கற்பும், அன்பும், நாணமும் தாங்கியவளாக இருத்தல் ஆகியவையே நல்ல மனைவி என்று சிறப்பாகச் சொல்வதற்குரிய தகுதிகளாகும் என்று ஆராயப்பட்டுள்ளன.

அன்பும், அறிவும், நற்பண்பும் திறமையும் உள்ள பெண்களால் தான் குடும்பங்கள் சிறப்படையும். இல்வாழ்க்கைக்குத் தகுந்த நற்பண்பு மனைவியிடம் இருந்தால் மட்டுமே வாழ்க்கை சிறப்படையும். பொருளாசை நீங்கி வாழ

வேண்டும். அவ்வாறு பொருளாசை நீங்கி வாழ்பவரே உயர்ந்த நிலையை அடையமுடியும் என விளக்கப்பட்டுள்ளன.

ஆண் எது செய்தாலும் ஏன் என்று கேட்காமல் அடங்கி இருப்பது பெண்ணுக்கு அழகு என்று கூறுகின்றனர். ஆணுக்கு விட்டுக் கொடுப்பதைப் பற்றி அறிவுரை கூறாத அறநூல்கள் பெண் அடங்கி நடக்காமல் இருப்பது துன்பமானது என்று கூறுவது ஆராயப்பட்டுள்ளது.

மைதீட்டுவதும், மலர் சூடுவதும் மங்கலமாகக் கருதும் மனநிலை இன்றும் மகளிரிடம் காணப்படுகிறது. மை கண்ணுக்குக் குளிர்ச்சி தருவது. அதனாலேயே பலர் சிறிய குழந்தைக்கும் மையிட்டு அழகு பார்க்கின்றனர். ஆனால் அறநூலார் மையையும், மலரையும் குறைவுபடுத்திப் பேசியிருப்பதைக் காணமுடிகிறது. பெண்கள் மைதீட்டி, மலர்சூடக் கூடாது என்ற தவறான கருத்தை அறநூல்கள் கூறுகின்றன என்பதைப் பற்றி ஆராயப்பட்டுள்ளன.

உயிரினும் சிறந்தது நாணம், அதனினும் சிறந்தது கற்பு. பெண்களுக்கு நாணம் முதலிய பெண்மைப் பண்புகளிருப்பின் அவர்களுக்கு மற்ற நலன்களும் சிறக்கும் என விளக்கப்பட்டுள்ளது. பயறுகளுள் பத்தினிப் பயறாக இருப்பது எவ்வாறு வேகாமல் இருப்பது போல் கற்புடைய பெண்ணை நெருப்பாலும் அழிக்க முடியாது என ஆராயப்பட்டுள்ளன.

கற்பு என்பது மழைபெய்விக்கும் ஆற்றல் பெற்றது. கற்புடைய பெண்கள் பெய் என்றால் மழைபெய்ய வேண்டும். வேறு தெய்வம் தொழாதவளாய்த் தன் கணவனையே தெய்வமாகக் கொண்டு தொழுது துயிலெழுகின்றவள் பெய் என்றால் மழை பெய்யும். மழை பெய்யச் செய்யும் மாண்புடையவளே பெண். கற்புடைய பெண்கள் கணவனைத் தவிரப் பிற கடவுள்களை வழிபடமாட்டார்கள் என்ற அறநூல்களின் கருத்தை ஆராயப்பட்டுள்ளன.

பெண்களின் சமுத்துவத்தையும் முன்னேற்றத்தையும் பற்றி ஆராயப்பட்டுள்ளன. ‘உமனிசம்’ என்ற சொல் பெண் உரிமைச்

சிந்தனைகளையும், அதன் அடிப்படையிலான போராட்டங்களையும் குறிப்பதற்குப் பயன்பட்டது பற்றி விளக்கப்பட்டுள்ளன. பெண்ணியம் என்ற சொல்லுக்கு பெண்களின் தேவைகளை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது, போராடுவது என்றும் பெமினிசம் என்ற சொல்லுக்கு பெண்விடுதலை இயக்கங்கள், பெண்நிலைவாதம் என்றும் ஆராயப்பட்டுள்ளன.

பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கலையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலகளவில் அரசியலிலும், பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அற இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள் எனும் இவ்வியலில் இல்லறம், மக்கட்பேறு, நட்பு, ஈகை, விருந்தோம்பல், அரசியல், துறவறம், புலால் மறுத்தல் என்பவை பற்றி ஆராயப்பட்டுள்ளது.

இல்வாழ்க்கை என்பது அன்பு, அடக்கம், ஒழுக்கம் ஆகியவற்றிலிருந்து வழுவாமலும், புகழ்பெற வாழ்தலும் என்று விளக்கப்பட்டுள்ளன.நல்ல மனைவியும், நல்ல குழந்தைகளும் இல்வாழ்க்கைக்கு அணிகலன்களாகும். அன்போடும், அறத்தோடும் இல்வாழ்க்கை நடத்த வேண்டும் என்பவை பற்றி ஆராயப்பட்டுள்ளன.

தன் உடலும், மனைவியும், தன்னிடத்தில் அடைக்கலமாக வைக்கப்பட்டப் பொருளும், தான் சேர்த்து வைத்தப் பொருளும் பொன்னைக் காப்பதுபோல நன்கு பாதுகாக்க வேண்டும். அவ்வாறு பாதுகாக்காது விட்டால் மிகுந்த துன்பம் உண்டாகும். இவை இல்லறத்தானின் கடமைகள் என்று உணர்த்தப்படுகின்றன.

இல்லற வாழ்வில் அறச்செயல்கள் செய்வதால் வீடு பேறினை அடைய முடியும். தண்ணீர்ப்பந்தல் வைத்தல், நிழல்தரும் மரங்களை வைத்தல், தன் வீட்டில் பிறர் இருக்க இடம் தருதல், பிற உயிர்களுக்குப் பகிர்ந்தளித்துத்

தானும் உண்ணுதல், கோவிலையும் மரங்கள் நிறைந்த சாலைகளையும் அமைத்து அழியாது நிலைபெறச் செய்தல் பெரிய அறமாகும் என எடுத்தியம்பப்பட்டுள்ளன.

பிறர் மனைவியை விரும்புகின்றவர்களுக்குத் துன்பங்கள் நேரும். புண்ணியம், புகழ், சுற்றத்தாரின் நேயம், வீரம் இந்த நான்கும் நீங்கிப் பகை, பழி, பாவம், அச்சம் என்ற நான்கும் அவர்களை வந்து சேரும். அதனால் இல்லறத்தில் வாழ்கின்றவர்கள் தகாத தீய செயல்களைச் செய்யக்கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளன. இரண்டு கண்களும் இணைந்து ஒரு பொருளைப் பார்ப்பது போல், கணவனும் மனைவியும் எவ்வித வேறுபாடும் இல்லாமல் நற்காரியங்களைச் செய்ய வேண்டும் என்பது பற்றி விளக்கப்பட்டுள்ளது.

இல்வாழ்வார்க்குச் சிறந்தது மக்கட்பேறே ஆகும். எல்லாச் சிறப்புக்களையும் விட நல்ல மக்களைப் பெறுவதே மிக உயர்ந்த சிறப்பாகும். தம்முடைய குழந்தையின் சிறு கைகளால் அளாவப் பெற்ற உணவு அமிழ்தத்தைவிட இனிமையானது என்றும், குழந்தையின் மழலைப்பேச்சு இசையைவிட இனிமையானது என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

‘மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்’

கறையானால் அரிக்கப்பட்ட ஆலமரத்தை அதன் விழுதுகள் தாங்கி நிற்பது போல் தன் தந்தையை துன்பத்திலிருந்து பாதுகாப்பது மகனின் கடமையாகும் என எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தந்தையின் அறிவுரைக்கு மேலான வேதம் எதுவும் இல்லை. பெற்றதாயை விட வணங்குவதற்குச் சிறப்பான கோயில் வேறு ஒன்றும் இல்லை. பெற்றோருக்கு பிறவி முழுவதும் உரிமையுடன் அமைந்து நிற்கும் உறவு தம் மக்களே என்றும், தாயும் தந்தையும் நம் கண்முன்னே காணப்படும்

தெய்வங்களாகும். அப்படிப்பட்ட கண்கண்ட தெய்வங்களையே நாம் முதலில் வணங்க வேண்டும் என்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

'முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு'

நட்புச் செய்வதற்குத் தொடர்பும், பழக்கமும் வேண்டியதில்லை ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும். முகம் மட்டும் மலரும்படியாக நட்புச் செய்வது நட்பு அன்று. நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்பு கொண்டு நட்புச் செய்வதே சிறந்த நட்பாகும் என்று விளக்கப்பட்டுள்ளன.

உடை நெகிழ்ந்தவுடன் கை உடனே உதவிக் காப்பது போல் நண்பனுக்குத் துன்பம் வந்தால் அப்பொழுதே சென்று துன்பத்தைக் களைவதே சிறந்த நட்பாகும். நண்பனுக்கு துன்பம் உண்டான காலத்தில் உதவுகின்றவனே சிறந்த நண்பனாவான் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அன்புடனும், உள்ள ஒற்றுமையுடனும் இருப்பவனே நல்ல நண்பனாவான். நண்பர்கள் இருவரும் பொறுமைக்குணம் உடையவர்களாக இருக்க வேண்டும். அந்த நட்பே வளரும் என்பது ஆராயப்பட்டுள்ளது.

மனிதன் செய்யும் அறங்களில் தலைசிறந்ததாக எண்ணப்படுவது ஈகையாகும். பயனை எதிர்நோக்காது செய்யப்படும் அறமே ஈகையாகும். மழையைப்போல மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். வறுமை உடையவர்களுக்கே உதவிகள் செய்திட வேண்டும். அறவழியில் மற்றவர்களுக்கு உதவிட வேண்டும். மற்றவர்களுக்குக் கொடுப்பதே சிறந்த அறமாகும். இலையும், பழமும் கொடுத்து அழிந்த வாழைமரத்தின் கீழே தோன்றிய கன்றும் மரமாகி கனி கொடுத்து உதவுவதைப் போல மற்றவர்களுக்கு உதவிட வேண்டும் என விளக்கப்பட்டுள்ளது.

இல்வாழ்க்கை நடத்துவதின் நோக்கம் விருந்தோம்பல் செய்து மேன்மை பெறுவதே ஆகும். விருந்தினராக வந்தவர் வீட்டின் வெளியே இருக்க தான்மட்டும் அமிழ்தமே கிடைத்தாலும் உண்ணக்கூடாது. விருந்தினராய் வருகின்றவர்களிடம் இன்சொல் கூறி, அறுசுவை உணவை விருந்தினருடன் பகிர்ந்து உண்ண வேண்டும். விருந்தினரை உபசரிப்பதே இல்லற தர்மம் ஆகும் என ஆராயப்பட்டுள்ளன. அரசன் வெற்றியுடன் வாழவேண்டும். குடிமக்கள் குறைகளை நீக்குவதே அரசாட்சியின் குறிக்கோளாக இருக்க வேண்டும். இத்தகைய அரசால்தான் நாட்டிலே நல்லறங்கள் நடைபெறும் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

இல்லறத்தில் வழுவாது வாழ்ந்து பின் அடுத்தநிலையில் எவ்வித ஆசையுமின்றி இல்லறப்பற்று நீங்கி வாழக்கூடிய வாழ்க்கை துறவறம் எனப்படும். முற்றும் துறந்தவரே உயர்ந்த நிலையை அடையமுடியும். மனிதப் பிறவி எடுத்த அனைவரும் அனைத்து உயிர்களிடமும் அன்போடு இருக்க வேண்டும். மற்ற உயிர்களைக் கொன்று அதன் இறைச்சியை உண்ணக்கூடாது என்று விளக்கப்பட்டுள்ளது.

அற இலக்கியங்களில் உள்ள நிலையாமைக் கருத்துக்கள் குறித்தும், கல்வியின் சிறப்பு குறித்தும், பெண்களின் நிலைகளைப் பற்றியும், அவர்களது வாழ்க்கை நெறிகள் குறித்தும், அவற்றின் நிறை குறைகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளன.

# துணை நூற்பட்டியல்

## முதன்மை நூல்கள்


1. **இராசமாணிக்கம் பிள்ளை.ம.,** **பழமொழி நானூறு,**
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
ம.ப.1967.

2. **இராசாராம் துரை.,** **பதினெண்கீழ்க்கணக்கு (மூன்றாம் பகுதி),**
முல்லை நிலையம்,
9,பாரதி நகர், முதல் தெரு,
தி.நகர்,
சென்னை,
ம.ப.2007.

3. **பாலசுந்தரம்பிள்ளை. தி.சு., (இளவழகனார்)** **பதினெண்கீழ்க்கணக்கு கடுகங்கடிகை மாமூலம்,**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
ம.ப. 1969.

4. **பாலசுந்தரம்பிள்ளை. தி.சு., (இளவழகனார்)** **நாலடியார்,**
திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம்,லிமிடெட்,
திருநெல்வேலி,
ம.ப.1964.

5. **மகாதேவ முதலியார். வா.,** **நானாற்பது,**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
ம.ப.1965.

6. **வரதராசனார்.மு.,** **திருக்குறள்,**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
154,டி.டி.கே.சாலை,
சென்னை,
மு.ப.1959.

**துணைமைநூல்கள்**

1. **ஆனந்தவல்லி மகாதேவன், ஜெயகோதைப் பிள்ளை.,** **பெண்ணியல்,**
அன்னை தெரசாமகளிர் பல்கலைக்கழகம்,
கொடைக்கானல்,
மு.ப. 2004.

2. **இராமசாமிபிள்ளை. செ.ரெ.,** **விவேகசிந்தாமணி,**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
மு.ப. 1952.

3. **இராமசாமிப்புலவர். சு.அ.,** **தனிப்பாடல் திரட்டு (ஐந்தாம் பகுதி),**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிராட்வே,
சென்னை,
மு.ப.1972.

4. **இராமசாமிப்புலவர். சு.அ.,** **பிரபுலிங்க லீலை,**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
1969.

5. **இராமநாதபிள்ளை. ப,** **சிதம்பரனார்.அ.,** **திருமந்திரம் (முதற்பகுதி),**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
ம.ப.1969.

6. **இளங்குமரன்.இரா.,** **குண்டலகேசி,**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
79,பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை,
1984.

7. **இளம்பூரணர்.,** **தொல்காப்பியம், பொருளதிகாரம்,**
**(உரை)**
சாரதா பதிப்பகம்,
6/16 தோப்பு வேங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை,
ஆ.ப.2008.

8. **இளவரசு சோம.,** **நன்னூல்,**
**எழுத்ததிகாரம்,**
மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை,
ஐ.ப.2002.

9. **இளையபெருமாள்.கோ.,** **புறநானூறு,**
மணிவாசகர் பதிப்பகம்,
31,சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை,
மு.ப.2006.

10. **கதிர்மகாதேவன்.,** **பெண்ணியம்,**
இருபதாம் வெள்ளிவிழா மலர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழக,
தமிழியற் பள்ளி வெளியீடு,
1994.

11. **கலியாணசுந்தனார்.திரு.வி.,** **பட்டினத்தார் பாடல்கள்,**
பழனியப்பா பிரதர்ஸ்,
கோனார் மாளிகை,
(ப.எ.14)25,பீட்டர்ஸ் சாலை,
சென்னை,
மு.ப.2001.

12. **கலியாணசுந்தரனார். திரு.வி.,** **பெண்ணின் பெருமை,**
புனித நிலையம்,
சென்னை,
எ.ப.1953.

13. **கலியாணசுந்தரனார்.திரு.வி, பாலசுப்பிரமணிய முதலியார். மா.,** **திருத்தொண்டர்புராணம் (பெரியபுராணம்),**
கங்கை புத்தக நிலையம்,
13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர்,
சென்னை,
இ.ப.2000.

14. **கன்னியப்பன். சிவ.,** **தனிப்பாடல் திரட்டு,**
முல்லை நிலையம்,
43,புதுத்தெரு, மண்ணடி,
சென்னை,
மு.ப.1996.

15. **சண்முகம் பிள்ளை.மு.,** **குறுந்தொகை,**
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்,
ம.ப.1994.

16. **சாமி சிதம்பரனார்.,** **கம்பராமாயணம் தொகுப்பு அயோத்தியா காண்டம்,**
இலக்கிய நிலையம்,
9-சவுராஷ்டிரா நகர்,
7-வது தெரு,
சென்னை,
மு.ப.1962.

17. **சாமிநாதையர்.உ.வே.,** **சீவகசிந்தாமணி,**
ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு,
உரிமைப் பதிப்பு,
சென்னை,
ஐ.ப.1949.

18. **சாரதாம்பாள்.செ.,** **பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும்,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை,
மு.ப.2005.

19. **சுப்பிரமணியபிள்ளை.கா.,** **திருவாசகம்,**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
154,டி.டி.கே.சாலை,
சென்னை,
மு.ப.1997.

20. **செந்துறைமுத்து.,** **தாயுமானவரும் அருணகிரிநாதரும்,**
மணிவாசகர் பதிப்பகம்,
89,லிங்குச்செட்டித் தெரு,
சிதம்பரம்,
மு.ப.1983.

21. **சோமசுந்தரனார்.பொ.வே.,** **ஐங்குறுநூறு,**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
மு.ப.1961.

22. **சோமசுந்தரனார்.பொ.வே.,** **கல்லாடம்,**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
மு.ப.1963.

23. **சோமசுந்தரனார். பொ.வே.,** **பத்துப்பாட்டு (முதற்பகுதி),**
திருநெல்வேலித் தென்னிந்தியசைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை,
ம.ப.1971.

24. **சோமசுந்தரனார்.பொ.வே.,** **பத்துப்பாட்டு (இரண்டாம் பகுதி),**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
மு.ப.1956.

25. **சோமசுந்தரனார்.பொ.வே.,** **புறப்பொருள் வெண்பாமாலை,**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை,
2004.

26. **திவாகரமுனிவர்.,** **சேந்தன் திவாகரம்,**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
மு.ப.1958.

27. **நச்சினார்க்கினியர்.,** **தொல்காப்பியம், சொல்லதிகாரம்,**
**(உரை)**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
மு.ப.1969.

28. **நாராயணசாமிஐயர். அ.,** **நற்றிணை,**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
நா.ப.1967.

29. **பாலசுந்தரம் பிள்ளை.தி.சு.,** **கலித்தொகை,**
**(இளவழகனார்)**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
ஐ.ப.1958.

30. **பாலசுந்தரம் பிள்ளை.தி.சு.,** **நீதி நூற்கொத்து(இரண்டாம் பாகம்),**
**(இளவழகனார்)**
திருநெல்வேலித் தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை,
சென்னை,
ம.ப.1974.

31. **பிரேமா.இரா.,** **பெண்ணியம் அணுகுமுறைகள்,**
தமிழ்ப்புத்தகாலயம்,
சென்னை,
மு.ப.1998.

32. **பிரேமா.இரா.,** **பெண்ணியம்,**
தமிழ்ப்புத்தகாலயம்,
சென்னை,
இ.ப.2001.

33. **மனிதநேயன்.,** **பாரதியின் முழக்கம்,**
நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்(பி) லிமிடெட்,
சென்னை,
மு.ப.2004.

34. **முல்லை முத்தையா.,** **நீதி நூல்கள் (முதல் தொகுதி),**
பூம்புகார் பிரசுரம்,
15, மன்னார்சாமி கோயில் தெரு,
சென்னை,
இ.ப.1979.

35. **ரெங்கம்மாள்.இரா, வாசுகி.சி.,** **பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும்,**
அறிவுப் பதிப்பகம்,
சென்னை,
மு.ப.2005.

36. **விசுவநாதய்யர்.ரா.,** **திருச்சிற்றம்பலக்கோவையார்,**
வெற்றிவேல் மின்சார அச்சகம்,
தஞ்சாவூர்,
1951.

37. **வேங்கடசாமி நாட்டார்.ந.மு.,** **அகநானூறு, களிற்றுயானைநிரை,**
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
ஐ.ப.1964.

38. **வேங்கடசாமி நாட்டார்.ந.மு.,** **சிலப்பதிகாரம்,**
ராமையா பதிப்பகம்,
10/14 தோப்பு வெங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை,
மு.ப.2005.

39. **வேங்கடசாமி நாட்டார்.ந.மு.,** **திருவிளையாடற்புராணம்,**
திருநெல்வேலித்தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
மூ.ப.1965.

40. **வேங்கடசாமி நாட்டார்.ந.மு,** **ஔவை.துரைசாமிப்பிள்ளை.சு.,** **மணிமேகலை,**
திருநெல்வேலித்தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி,
ம.ப.1964.

## ஆய்வேடுகள்


1. **அமுதவல்லி.ந.,** **ஆண் - பெண் எழுத்துக்களில் (நாவல்கள்) மகளிர் சிக்கல்கள் பெண்ணியத் திறனாய்வு,** மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 2011.

2. **சிலம்புமணி.செ.,** **திருக்குறளும் பிற்கால நீதிநூல்களும்,** மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 2006.